# விடுதலைப் புலிகளின் போராட்ட

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண் புலியாக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 2ம் லெப். மாலதியின் 10 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு 'சுதந்திரப்பறவைகள்' செய்தித்தாளில் (1993 இல்) பிரசுரமான கட்டுரையை இங்கு மீள்பிரசுரம் செய்கின்றோம்.

**1985**ஆம் ஆண்டின் முற்பகுதி, மலைப்பிரதேசத்தில் அமைந்திருந்த ஒரு பயிற்சி முகாமில், எமது பாசறைக்கு முன்பாக, ஒரு பாறாங்கல்லில் இருந்து 'போர்க்குரல் –1', படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு முன்பாகச் சிறிது தூரத்தில் அருவி ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. திடீரென அந்த அருவி ஓடுகின்ற ஓசையோடு சேர்ந்துகலகல என்ற சிரிப்பொலியும், கதைக்கின்ற சத்தமும் கேட்டது. அத் திசையை நோக்கினேன். ஏறத்தாழ பதினைந்து, இருபது பெண்கள் வண்ண வண்ணச் சட்டைகளுடன் வந்து கொண்டிருந்தார்கள்.

முன்னுக்கு வந்தவள், நீல நிறத்தில் புள்ளிகள் போட்டிருந்த சட்டையுடன், இரட்டைப் பின்னலுடன், எட்டி எட்டிக் கால்களை வைத்து, வேகமாகவும் மிடுக்காகவும் நடந்து வந்து கொண்டிருந்தாள். என்னருகில் வந்ததும் என்னை ஒரு மாதிரி மிடுக்காகப் பார்த்தாள். பின் எல்லோரும் பாசறைக்குள் நடந்து சென்றார்கள். நான் நினைத்துக் கொண்டேன், 'எங்களைப்போல பயிற்சி எடுக்கத்தானே வந்தார்கள். பயிற்சியின்போது உந்த மிடுக்கு எங்கே போகுதோ தெரியாது.'

இரண்டு நாள் கழித்து நான் என்னுடைய அறையில் நின்றிருந்தேன். நீலநிறச் சட்டை அணிந்தவள் வந்து என்னைப் பார்த்துக் கேட்டாள்,

"அக்கா, விளக்குமாறா வைத்திருக்கிறியள்?" என்று. நான் உடனே பெரிதாகச் சிரித்துவிட்டு "இல்லை, இல்லை எங்களிடம் விளக்குமாறுதான் இருக்கின்றது" என்றேன்.

பின் இவளிடம் இடம், பெயர், ஊர் எல்லாவற்றையும் கேட்டேன். முழுப்பெயர் சகாயசீலி, வீட்டுப்பெயர் சகாயம் என்றாள். பின் நான் சொன்னேன், "நீங்கள் சொந்தப் பெயரை இனிமேல் யாருக்கும் சொல்ல வேண்டாம். ஏதாவது பொய்ப் பெயரைச் சொல்லுங்கள்" என்றேன்.

இவள் கதைக்கும் தமிழுக்கும் நான் கதைக்கும் தமிழுக்கும் நிறையவே வித்தியாசம் இருந்தது. இதனால்தான் "விளக்கமாறு வைத்திருக்கின்றீர்களா?' எனக் கேட்பதற்குப் பதிலாக, 'விளக்குமாறா வைத்திருக்கிறீர்கள்' என்று கேட்டாள்.

பின்னர் இவளைக் காணும்போதெல்லாம், "விளக்குமாறா வைத்திருக்கிறியள்" "பேனையா வைத்திருக்கிறியள்" என்று மற்றவர்களுக்குச் சொல்வது மாதிரிப் பகிடிவிட்டுச் சிரிப்பேன்.

நாங்கள்தான் முதல் முதலில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளாகப் பயிற்சிக்குச் சென்றிருந்தோம். வெவ்வேறு பட்ட சமூகத்தில் இருந்து எல்லாரும் வந்திருந்ததால் எங்களுக்குள், மொழி உச்சரிப்பில் வேறுபாடு, ஊர் வேறுபாடு, மாவட்ட வேறுபாடு இருந்தது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பார்கள். ஆனால் எங்களுக்கு இந்தப் பழமொழி மாறிவிட்டது. எங்களுடைய பழக்கங்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வரும்வரை மட்டுந்தான் இருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பில் பயிற்சி எடுத்து முடித்த பின்னர் எங்களுடைய பண்பாட்டுக் கோலங்கள், பழமைவாதங்கள், வேறுபாடுகள், மூடநம்பிக்கைகள் எல்லாமே ஆணிவேறாக அக்குவேறாகச் சிதைந்து விட்டன.

அவளின் தமிழைப் பகிடி பண்ணியதால், இவள் ஒருநாள் எங்களுடைய பொறுப்பாளரிடம் என்னைப் பற்றி முறையிட்டாள். என்னையும் இவளையும் விசாரித்த பொறுப்பாளர், அவள் முன்னிலையில் அவளை எண்ணும்படி கூறி, என்னைத் தோப்படிக்க விட்டார். அவர் சென்றபின் நான் தோப்படிக்க, இவள் எண்ணிக்கொண்டு நின்றாள். தோப்படித்துக் கொண்டிருக்கும் போது இடையில், எண்ணுவதை நிறுத்திவிட்டு, "இனி நீங்கள் அடிக்க வேண்டாம். நான் அடிக்கின்றேன்" என்றாள். "இல்லை. எனக்குத் தந்த தண்டனையை நானே செய்து முடிக்கின்றேன்" என்றேன். அவள் என்னைப் பிடித்து நிற்பாட்டும்படி கெஞ்சிக் கேட்டும், நான் கோபமாக ஏசிவிட்டு நானே தண்டனையைச் செய்து முடித்தேன்.

இரண்டு நாட்களாக நான் தாண்டித் தாண்டி நடந்து கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் இவள் என்னைக் கண்கலங்கப் பார்ப்பாள்.

ஒரு ஞாயிறு காலை, எமது காலை உணவைப் பெறுவதற்காக நான் வரிசையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது இவள் என் பின்னால் நின்று கொண்டிருந்தாள். நான் சாப்பாட்டைப் பெற்றுக் கொண்டு, எங்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையான மரக்குற்றியில் அமர்ந்தபோது, இவளும் என்னருகில் வந்து இருந்தாள். பின் என்னுடன் சரளமாகக் கதைத்தாள். தான் எனக்குத் தண்டனை வாங்கித் தந்ததையிட்டுக் கவலைப்படுவதாகக் கூறினாள். இவளின் இரக்கமான உணர்வுகளைப் புரிந்து கொண்ட நான், "பிரச்சினையில்லை. நாங்கள் நல்லவர்களாக வளர்வதற்காகத்தானே இந்தத் தண்டனைகள்" என்றேன்.

## நோவுதா மணி?
## இனி அடிக்கமாட்டன்.

மன்னாரில் பரந்த வயல்வெளிகளைக் கொண்ட ஆட்காட்டிவெளியில், பேதுறு சகாயசீலி என்னும் பெயரோடு, துடிப்பாக விளையாட்டுக்களிலும், படிப்பிலும் திறமையாகத் திகழ்ந்தவள், எமது பயிற்சிப் பாசறையில் மாலதி என்னும் பெயரோடு துடிதுடிப்பான சுறுசுறுப்பான போராளியாக வீறுநடைபோட்டுக் கொண்டிருந்தாள்.

பயிற்சிப் பாசறையில், நானும் மாலதியும் நல்ல தோழிகளாக இருந்தோம். இருவரும் சண்டை பிடிக்காத நாளே இல்லை என்றுதான் சொல்லலாம். ஆனால், அடுத்த நிமிடமே சமாதானமாகி விடுவோம். ஏதாவது, நான் இவளுக்குப் பிடிக்காத மாதிரிச் சொன்னால், உடனே என்மேல் அடிதான் முதல் விடும். பின்னர் தான் என்னுடன் கதைப்பாள். சிறிது நேரத்தில் அடித்த இடத்தைத் தொட்டுப் பார்த்து, "நோவுதா மணி? இனி அடிக்கமாட்டன் மணி" என்பாள். எப்போதுமே இவள் யாருடனும் அன்பாகக் கதைக்கும்போது 'மணி' என்ற சொல்லையே பாவிப்பாள். இவளுடைய இந்தப் பாசையை நாளடைவில் நானும் பழகிக் கொண்டேன். இப்போதுகூட இவள் பாவிக்கும் 'மணி' என்னும் சொல் என்னுடைய பேச்சுவழக்கிலும் வருவது உண்டு.

பாசறையில் எல்லாவிதமான பயிற்சிகளையும் மாலதி சிரமமின்றிச் செய்து முடித்தாள். இவள் எந்தப் பயிற்சியையுமே சிரமம் என்று கூறியதுமில்லை – செய்ய முடியாது எனக் கூறியதும் இல்லை. நாங்கள் எமது பாசறைக்குப் பத்துப் பதினைந்து கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து உணவுப் பொருட்களைத் தூக்கி வருவோம். இவ்வேளையில், யாராவது கூடிய பாரமான பொருட்களைத் தூக்கி வந்தால், இவள் தான் கொண்டு வந்ததை மற்றவளிடம் கொடுத்துவிட்டு, மாறித் தூக்கி வருவாள். இவள் தன் பொருட்களை எல்லாருக்கும் முதல் பாசறைக்கு கொண்டு வந்து சேர்த்துவிடுவாள். இவள் என்னிடம் கேட்பாள், "வா மணி. திரும்பிப் பொருட்களைத் தூக்குமிடம் செல்வோம்" என்று. "இப்பத்தானே வந்தோம்? ஏன் திரும்பிப் போகவேண்டும்?" என்று கேட்டால், "பாவமடி, யார் ஏலாமல் வைச்சு வைச்சுத் தூக்குதுகளோ தெரியாது. வா, மணி போவம். இடைக்கிடை நாங்கள்




**2 ம் லெப். மாலதி**
**(பேதுறு சகாயசீலி)**
**(ஆட்காட்டிவெளி, மன்னார்)**
**பிறப்பு : 1967 - 01 - 04**
**வீரச்சாவு : 1987 - 10 -10**

தூக்கிக் கொடுப்போம்." என்று என்னை கூட்டிச் செல்வாள்.

## அநியாயப்படுவார் செய்கின்ற வேலைகள்

மாலதியிடம் சரியான முரட்டுத்தனமும், சரியான இரக்கமான குணமும் ஒருங்கே அமைந்திருந்தன. தன்னிடம் இருப்பதை இல்லாதவர்களுக்குக் கொடுப்பதிலும், தானாகச் சென்று உதவிகள் செய்வதிலும் மாலதி என்றுமே பின் நின்றதே இல்லை.

பயிற்சி முடிந்ததும் நாங்கள் மன்னாருக்கு வந்தோம். மன்னாருக்கு வந்ததும் இவள் 'கொலரை' இழுத்துவிட்டுச் சொன்னாள், "எப்படியடி? நீங்கள் முதல் முதல் தமிழீழத்தில் என்ரை மாவட்டத்திலைதான் பெண் போராளிகளாகக் காலடி எடுத்து வைத்திருக்கின்றீர்கள்" என்றாள்.

பின்னர் நாங்கள் மோட்டார் சைக்கிள் ஓடப் பழகினோம். அங்கே, இங்கே என்றெல்லாம் விழுந்தெழும்பிப் பழகினோம். இவள் முதலில் பழகிவிட்டாள். "பின்னால் ஏறு. நான் ஓடுறன்" என்பாள். எங்காவது மோதப்போவது தெரிந்தால், தான் பாய்ந்து ஓடிவிடுவாள். நாங்கள்தான் விழுந்து மூக்குடைவோம். விழுந்து கிடப்பதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு நிற்பாள். "நில்லடி வாறன்" என்று தடி எடுத்துக் கொண்டு ஓடினால் "மணி, மணி" என்று சாலம் பண்ணிச் சமாளித்துவிடுவாள்.

ஒருநாள் என்னையும் இவளையும் தேங்காய் எடுத்து வரும்படி முகாம் பொறுப்பாளர் வெளியில் அனுப்பினார். இவள்தான் மோட்டார் சைக்கிள் ஓடிவந்தாள். வரும் வழியில், "மாந்தையில் எங்கடை பெட்டைகள் 'கட்அவுட்' நிற்கிறார்கள். அங்கே போட்டுவந்து தேங்காயை எடுத்துப்போவம்" என்றாள். "இல்லையடி. நேரம் போனால் பொறுப்பாளர் தண்டனை தருவர். வேண்டாம்" என்றேன். "இல்லையடி, நீ வா. நான் எல்லாம் சமாளிக்கிறேன்" என்றாள். சரி என்று மாந்தைக்குச் சென்று, திரும்பி, தேங்காய் எடுத்து வந்தோம். நேரம் போனதாக கண்மண் தெரியாமல் ஓடிவந்தாள். இடையில் ஒரு மரத்துடன் மோதி இருவரும் விழுந்துவிட்டோம். இரண்டு பேருக்கும் காயம். எனக்கு உதடு உடைந்துவிட்டது. அவளுக்கு முழங்காலிலும், முழங்கையிலும் காயம். எனது இரத்தத்தைத் துடைத்துவிட்டு, "மணி, மோட்டார் சைக்கிளாலை விழுந்தது என்று பேசில யாருக்கும் சொல்லாதை" என்றாள். "ஏன்?" என்றேன். "எல்லாரும் பகிடி பண்ணுவாளுகள்" என்றாள்.

"அப்ப காயத்திற்கு என்ன சொல்வது?" என்றேன். "உனக்குத் தடி குத்திவிட்டது என்று கூறுகிறேன். எனது காயத்தை யாருக்கும் காட்டமாட்டேன்" என்றாள். அதேமாதிரி மடித்திருந்த சேட் கையை இழுத்து மூடிவிட்டாள். முகாமுக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே இதேமாதிரியே கூறினாள். இருவரும் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை யாருக்கும் சொல்லவில்லை. ஒருநாள் எனக்கு எதற்கோ அடித்துவிட்டாள். இருவருமே துரத்துப்பட்டுச் சண்டை செய்ய, பொறுப்பாளர் வந்து விலக்குப் பிடித்துவிட்டு, இருவருக்கும் தண்டனை தந்து, "உங்கள் இரண்டு பேரையும் மேய்க்க எனக்கு பிறம்பாக ஒருநாள் வேணும்" எனக்கூறி, "போங்கோ" என்றுவிட்டார். மாலதி அடித்த கோபத்தில் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை எமது பொறுப்பாளரிடம் கூறிவிட்டேன். "சொல்லிப் போட்டாய். இஞ்சால வா. உனக்கு நல்லாத் தாறன்." என்றாள். இவள் நினைத்ததைச் செய்தே முடிப்பாள். இதனால் அவளின் மோட்டடிக்குப் பயந்து, பொறுப்பாளருக்குப் பின்னாலேயே திரிந்தேன். அன்றிரவு நித்திரையில் வைத்து, 'நம்பிக்கைத் துரோகி' எனக்கூறி, எனக்கு அடித்துவிட்டாள். நான் நல்ல நித்திரையில் இருந்ததால் திருப்பி அடிக்காமலேயே படுத்துவிட்டேன்.

ஒருநாள் எங்களுடைய பொறுப்பாளர் எமக்குப் புதிய 'சயனைட்'கள் தருவதற்காகச் சயனைட்டைக் கறுப்பு நூலால் கட்டிக் கொண்டிருந்தார். நானும் மாலதியும் பொறுப்பாளருக்கு அருகில் இருந்தோம். "நாங்களும் நூல் கட்டுறம். தாங்கோ." என்றோம். பொறுப்பாளர், "இரண்டு பேரும் ஓரிடத்தில் வந்தால் நன்மை நடக்காது. அநியாயம்தான் நடக்கும். இரண்டு பேரும் சும்மா